**குண்டசாலை பிரதேச சபை - 2022**
---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

குண்டசாலை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குண்டசாலை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்களை சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் 05 சந்தர்ப்பங்களுக்குரிய நிர்மாணங்கள் மற்றும் திருத்தங்கள் மதிப்பீட்டு பெறுமதி மதிப்பிட்டு பெறுமதி ரூபா 218,000 மூலதனமாக்கப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்கம் செய்யப்படும் | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | ரூபா 650,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த வராபிட்டிய பொது நூலகத்தின் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் இரத்து செய்யப்பட்டு இருக்கையில் அப்பெறுமதி மூலதனமாக்கப்பட்டு இருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | கலகொட ஆயுர்வேத கட்டிடத்திற்கு மின்சாரத்தை பெற்றுக் கொள்ளுதல் ஓரச்சுவர் திருத்த செயற் திட்டத்தின் உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதி ரூபா 300,000 கூடுதலாகவும் வாவின்ன பொது நூலக அபிவிருத்தி செயற்திட்டத்தின் பெறுமதி ரூபா 100,000 குறைத்தும் மூலதனமாக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | உடன்படிக்கையை மேற்கொள்ளாமல் அல்லது வேறு கடப்பாடு ஒன்று இல்லாமல் மீளாய்வாண்டின் போது 02 அபிவிருத்தி திட்டங்களின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 26,000,000 கூட்டுத்தொகை கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு இருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | மோட்டார் வண்டி மற்றும் வண்டில்களின் கீழ் ரூபா 715,550 என காண்பிக்கப்பட்டு இருந்த உழவு இயந்திரமொன்று ரூபா 813,000 என மீண்டும் மோட்டார் வாகன கணக்கின் கீழ் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் பட்ட 07 வருமான விடயங்களுக்குரிய அட்டவணை களில் காண்பிக்கப்பட்ட மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 43,864,689 ஆன இணக்கமின்மை ஒன்று அவதானிக்கப்பட்டது. | வேறுபாட்டை சரியாக இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக . | கணக்கு மீதிகள் சரியாக இருக்க வேண்டும். |
| (ஆ) | மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்திலும் மானியத்தின் மூலம் பங்களிப்பு கணக்கு மீதி ரூபா 1,379,380,149 ஆக இருந்த போதும் நிலையான சொத்துக்கள் மீதி ரூபா 1,380,448,706 இருந்ததால் ரூபா 1,068,557 ஆன வேறுபாடு காணப்பட்டது வேலைபார்த்து இனங்கண்டு சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நூலக புத்தகங்களை மூலதனமாக்கப்பட வில்லையென | - மேற்படி - |

### 1.6.3 தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நீண்டகாலமாக இருந்து வரும் ரூபா 15,382 ஆன மீதியை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீதியை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதர்க | இனங் கண்டு தீர்வு செய்ய வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட உள்ளவாறு ரூபா 10,772,783 ஆன முற்பண மீதிக்குரிய கோவைகள் மற்றும் ஆவணங்கள் என்பன சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | சரியான அட்டவணைகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சரியாக அட்டவணைகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் பட்ட மொத்தம் ரூபா 334,216,894 ஆன 08 சொத்து மீதிகளுக்குரிய அட்டவணை கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் சரியான அட்டவணைகளை பராமரித்துச் செல்வதாக | சரியாக கோவைகள் மற்றும் பதிவேடுகள் பேணிச் செல்ல வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத் தீர்மாணங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், மற்றும் முகாமைத் தீர்மாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 149 ஆம் பிரிவு | இலங்கை சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்டிருந்த ஹொட்டல்களின் வருமானத்திலிருந்து 1 சதவீததிற்கு மேற்படாத கட்டணமொன்றை பெற்றுக் கொள்ள வேண்டிய போதிலும் 02 ஹொட்டெல்களிலிருந்து 2015 முதல் 2018 வரையான காலப் பகுதிக்காக ரூபா 21,135,367 ஆன அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சட்ட ஏற்பாடுகளின் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமான கோவையின் 104(3) ஆம் பிரிவு | சமைக்கு சொந்தமான கெப் வண்டி திடீர் தீ விபத்திற்குட்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக ஆரம்ப அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை | முறைப்பாட்டின் பிரதி ஒன்றை பெற்றுக் கொள்ள முடியாது இருப்பதால் அடுத்து வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 181,223,144 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 16,544,674 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 42,815,634 | 37,318,164 | 30,625,957 | 47,531,542 | 42,995,486 | 36,816,223 | 22,022,975 | 40,839,335 |
| (ii) | வாடகை | 8,781,619 | 24,389,340 | 11,056,666 | 22,114,206 | 11,824,419 | 6,254,380 | 14,514,014 | 8,781,532 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 5,985,000 | 3,171,436 | 3,171,436 | - | 8,801,000 | 2,510,362 | 2,510,362 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 141,109,000 | 223,083,960 | 188,026,719 | 35,904,394 | 117,974,000 | 53,581,810 | 169,179,467 | 847,153 |
| | | 198,691,253 | 287,962,900 | 232,880,778 | 105,550,142 | 181,594,905 | 99,162,775 | 208,226,818 | 50,468,020 |

#### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதவரி**<br>மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு வீதவரி நிலுவை மீதி ரூபா 47,475,321 ஆக இருந்ததுடன் அலகொன்றின் வீதவரி நிலுவை ரூபா 10,000 இற்கும் இடைப்பட்ட 450 வீதவரி ஆதனங்களிலிருந்து மொத்தம் ரூபா 22,405,446 ஆக இருந்தது. | ஆதனங்களைத் தடைசெய்யும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக | சட்ட ஏற்பாடுகள் மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**(ஆ) கடை வாடகை**

| | | | |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை கடை வாடகை மீதி ரூபா 4,239,976 ஆக இருந்தது. | வாடகை கொடுப்பனவு செய்யாதவர்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதாக | சட்டங்கள் மற்றும் விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும |
| (ii) | திகன பல நோக்கு கட்டிடத்தின் 33 கடைகளுக்காக 2021 ஒக்டோபர் 06 ஆம் திகதிய மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் கடை வாடகை அறவிடப்படாமல் 2015 பெப்ரவரி 26 ஆம் திகதிய போது சபை தீர்மானத்தின் பிரகாரம் வாடகை அறவிடபட்ட காரணத்தினால் 2021 ஆம் ஆண்டின் நவம்பர் முதல் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 1,216,600 தொகையும் திகன ரணவிரு மாவத்தையில் 86 கடைகளுக்காக 2022 ஜுலை 27 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் வாடகை அறவிடப்படாமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 367,000 என மொத்தம் ரூபா 1,583,600 ஆன வாடகை சபைக்கு கிடைக்காமல் போய் இருந்தது. | எதிர்ப்பு தொடர்பாக உள்ளுராட்சி மன்ற ஆணையாளரிடமிருந்து ஆலோசனை பெற்றுக் கொள்வதாக | புதிய மதிப்பீட்டின் பிரகாரம் வாடகை அறவிடப்பட வேண்டும் |
| (iii) | பலகொல்ல மொரகஹாபிட்டிய வியாபார தொகுதியின் 48 கடைகளுக்காக 2020 செப்டெம்பர் 04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் வாடகை அறவிடப்படாமல் 2014 ஜனவரி 30 ஆம் திகதி நடை பெற்ற சபை தீர்மானத்தின் அடிப்படையில் வாடகை அறவிடப்பட்டதால் 2020 ஒக்டோபர் முதல் மீளாயாவாண்டின் திசெம்பர் 31 வரை ரூபா 8,235,000 ஆனா வாடகை வருமானம் சபைக்கு கிடைக்காமல் போய் இருந்தது | மதிப்பீட்டு திணைக்களத்திற்கு தெரியப்படுத்தியுள்ளதாக | - மேற்படி - |
| (iv) | மெனிக்ஹின்ன புதிய நான்கு மாடி கட்டிடத்தில் 2018 ஜனவரி 01 ஆம் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டு மாதாந்தம் ரூபா 100,000 தொகைக்கு தனியார் நிறுவனம் ஒன்றிற்கு 10 ஆண்டுகளுக்கு | எதிர்ப்பு தொடர்பாக விலை மதிப்பீட்டு திணைக்களம் அறிவிக்கப்பட்டுள்ளதாக | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | குத்தகை கையளிக்கப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 06 ஆம் திகதிய விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் ரூபா 300,000 ஆன மதிப்பீடு தொகை 2018 ஜனவரி 01 ஆம் திகதி முதல் அடுத்த 05 ஆண்டுகளுக்கு அறவிட முடியுமென குறிப்பிடப்பட்டிருந்த போதும் 2018 ஆம் ஆண்டு முதல் 2022 திசெம்பர் 31 வரையான 60 மாத காலப் பகுதிக்கு சபையால் மாதந்தம் ரூபா 100,000 வீதம் ரூபா 6,000,000 ஆன மாதாந்த வாடகை அறவிடப்பட்டிருந்தது. சபையால் மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் வாடகை அறவிடப்படாத காரணத்தினால் ரூபா 12,000,000 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. | | |
| (v) | 2016 மார்ச் 17 ஆம் திகதிய 2016/3 ஆம் இலக்க மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் கடைகளை உப குத்தகைக்கு வழங்க முடியாது என குறிப்பிடப்பட்டிருந்த போதும் மெனிக்ஹின்ன புதிய வியாபாரத் தொகுதியின் 10 கடைகள் மற்றும் மெனிக்ஹின்ன பொது வியாபார சந்தையின் முதலாவது மாடியின் 03 கடைகளும் உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. | குத்தகை பெற்றுக் கொண்டவர்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு சபைக்கு வருமா னம் கிடைக்காமல் போவதற்கு இடமுள்ளதாக | உடன்படிக்கை மற்றும் சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vi) | மெனிக்ஹின்ன பொது சந்தையின் கீழ் மாடியில் அமைந்துள்ள 04 கடைகள் 2017 செப்டெம்பர் 19 ஆம் திகதிய மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் வாடகை அறவிடப்படாத காரணத்தினால் 2019 ஆம் ஆண்டின் ஒக்டோபர் முதல் மீளாய்வாண்டு திசெம்பர் வரை 39 மாத காலப்பகுதிக்காக உரிய கடை வாடகை ரூபா 177,450 குறைத்து அறவிடப்பட்டிருந்தது. | புதிய உடன்படிக்கை மேற்கொண்டு உரிய தொகையை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக | புதிய மதிப்பீட்டின் பிரகாரம் கடை வாடகை அறவிடுதல் வேண்டும். |

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணங்களும்

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 6,931,996 ஆகவும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 23,522,834 ஆகவும் இருந்தது. | நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நீதிமன்றத் தண்டப்பணத்தையும் முத்திரைக் கட்டணங்களையும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய 05 கணக்கு மீதிகள் கூட்டுத்தொகை ரூபா 196,623,493 ஆக இருந்ததுடன் அதில் 01 இற்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய கணக்கு மீதிகள் ரூபா 194,352,328 ஆக இருந்தது. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக | பெறவேண்டிய மீதிகளை அறவிடல் வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட செலுத்த வேண்டிய 02 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 334,633,940 ஆக இருந்தது. அதில் 01 இற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 196,873,889 ஆக இருந்தது. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக | செலுத்த வேண்டிய மீதிகள் தீர்வு செய்யப்பட வேண்டும் |
| (இ) | நகர அபிவிருத்தி அதிகார சபையின் பெயரில் நடத்தி செல்லப்பட்டிருந்த வங்கிக் கணக்கில் ரூபா 7,352,748 ஆன பணத்தை ஆக்கப்பூர்வமான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகன நிறுத்தும் இடமொன்றை நிறுவுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக | ஆக்கப்பூர்வான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | சபைக்குச் சொந்தமான 03 காணிகளின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. | விலை மதிப்பீட்டு திணைக்களத்துக்கு அனுப்பு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் சிக்கலொன்று காரணமாக பெறுமதியை இனங்காண்பதற்கு முடியாதுள்ளதாகவும். | சிக்கலற்ற உரித்தை கையேற்க வேண்டும். |

**3.2 விளைவற்ற / குறை பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட மொத்தம் ரூபா 869,900 ஆன 03 வாகனங்கள் மற்றும் பெறுமதி இனங்காண முடியாத 02 வாகனங்கள் 6 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரையான காலப்பகுதி வரை விளைற்றும் குறைப் பயன்பாட்டுடனும் காணப்பட்டன. | ஏல விற்பனை செய்வதற்கும் மீண்டும் கையேற்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாக | கைதவிர்ப்பதற்கு அல்லது கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபையால் பயன்படுத்தும் கெப் வண்டி மற்றும் டிபெண்டர் வண்டியின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்தது. கல் உருளை இயந்திரங்கள் மற்றும் போபி நெட் இயந்திரம் என்பவற்றை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | முறையான கையேற்பிற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) சபை பயன்படுத்துகின்ற 20 காணிப் பகுதிகளின் உரித்தி சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | கையளிப்பு கட்டளையைப் பெற்றுக்கொள்ள் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது | உரித்தை கையேற்றல் வேண்டும் |

**3.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தலைவரால் பயன்படுத்தப்பட்ட வாகனம் 2020 ஒக்டோபர் 04 ஆம் திகதி முதல் 2022 மார்ச் 22 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் திருத்தவேலைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்ட காரணத்தினால் சபைக்கு சொந்தமான 03 கெப் வண்டிகள் இருக்கையில் தலைவரின் பயன்பாட்டிற்காக கேள்வி நடைமுறை பின்பற்றப்படாமல் வாடகை வாகனம் ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டு 17 மாத காலப்பகுதிக்காக ரூபா 1,073,945 தொகை சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. தெரிவு செய்யப்பட்ட வாகனத்திற்குரிய வாகனத்தின் உரித்து பதிவு, வருடாந்த | வாகனத்தை திருத்துவதற்கு நீண்டகாலம் எடுத்தமை மற்றும் குலாம் வாகனமொன்றை பெற்றுக் கொண்டால் நாளாந்த கடமைகளை நிறைவேற்ற முடியாது இருப்பதாகவும் | காணப்படும் வாகனத்தை பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அனுமதி பத்திரங்கள் மற்றும் காப்புறுதி மேவுகை தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ளாமல் குறித்த வாகனத்தினை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டு இருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | குண்டசாலை மற்றும் பாத்ததும்பர பிரதேச சபையுடன் இணைந்து உடன்படிக்கை ஒன்றுக்கு 2016 ஆம் ஆண்டில் ஜப்பான் உதவியின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட அலுத்வத்த உரத் தயாரிப்பு மற்றும் களஞ்சியப்படுத்தல் தொகுதி நிர்மாண செயற்திட்டத்திற்காக 2016 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையான காலப்பகுதியில் உழைக்கப்பட்டிருந்த ரூபா 22,091,556 ஆன வருமானம் உடன்படிக்கையின் பிரகாரம் இரண்டு சபைகளுக்கிடையே சமமாக பகிர்ந்து அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் பாத்ததும்பர பிரதேச சபைக்கு வழங்கப்பட வேண்டிய தொகையை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வழங்கியிருக்கவில்லை. | செலவிடவுள்ள செலவினங்களை இரண்டு தரப்பினராலும் ஏற்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளதாக | உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தால் வேண்டும். |

**3.5 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்களும் மிகையும்**<br>அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியுடன் ஒப்பிடும் போது 10 பதவிகளில் 21 வெற்றிடங்களும் பதவியொன்றில் 20 மிகைகளும் காணப்பட்டன. | அரச கொள்கைகள் அடிப்படையில் ஆட்சேர்ப்பு இடைநிறுத்தப்பட்டுள்ளதால் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டதன் காரணமாக மிகையாக இருந்ததாக | வெற்றிடங்களை பூர்த்தி செய்யப்பட வேண்டும் |
| **(ஆ) ஊழியர் கடன்**<br>2002, 2018 – 2021 காலப்பகுதியில் ஓய்வு பெற்ற மரணித்த மற்றும் சேவை விட்டுச் சென்ற மரணித்த உத்தியோகத்தர்களிடமிருந்தும் ஊழியர்களிடமிருந்தும் ரூபா 1,276,679 ஆன கடன் மீதியொன்று அறவிடப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டும் |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வான்டில் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 25 வருமான விடயங்களில் 22 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலும் 23 செலவின விடயங்களில் 29 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை | எதிர்வரும் ஆண்டில் சரியாக பாதீட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கவனத்தடனும் தேவைப்பாட்டினை கருத்திற் கொண்டு பாதீடு தயாரிக்கப்பட வேண்டும். |

### 4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் நியதிகளின் பிரகாரம் சபையினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங்காணப் பட்டிருந்த போதிலும் அவற்றை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலக்குகளையும் குறிகாட்டிகளையும் ஓரளவு தூரத்திங்கு இனங்காணப்பட்டுள்ளது. | நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு செயற்படுத்துதல் வேண்டும். |